தினமணி

## உரங்களின் விலை திடீர் உயர்வு: விவசாயிகள் வேதனை

எஸ்.சபேஷ்

First Published : 02 Nov 2011 12:55:31 AM IST

அரக்கோணம், நவ.1: கடந்த 15 நாள்களில் காம்ப்ளக்ஸ் உரங்களின் விலை மூட்டைக்கு ரூ.250-க்கு மேல் அதிகரித்துள்ளது. இதனால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.

தமிழக அரசின் 4 சதவீத வரி குறைப்புக்குப் பிறகு பூச்சிக்கொல்லிகள், யூரியா ஆகியவை விலை குறைந்துள்ளன. இந்நிலையில் அகில இந்திய அளவில் காம்ப்ளக்ஸ் உரங்கள் கடும் விலை உயர்வைச் சந்தித்துள்ளன.

இந்தியாவில் கோரமண்டல், ஸ்பிக், பாக்ட், இந்தியன் பொட்டாஷ் லிமிடெட் ஆகிய நிறுவனத்தினர் பல்வேறு காம்ப்ளக்ஸ் உரங்களைத் தயாரித்து வருகின்றனர். கடந்த 15 நாள்களில் இந்த அனைத்துத் தயாரிப்புகளும் விலையேறியுள்ளன. 16-20 ரகம் ஒரு மூட்டை ரூ.533-லிருந்து ரூ.720 ஆகவும், 20-20 ரகம் ரூ.510-லிருந்து ரூ.740 ஆகவும், 14-28-14 ரகம் ரூ.545-லிருந்து ரூ.755 ஆகவும், டிஏபி ரூ.686-லிருந்து ரூ.925 ஆகவும் விலை உயர்ந்துள்ளன.

தற்போது நவரைப்பட்ட காலமாக இருப்பதால் நவம்பர், டிசம்பர் காலத்தில் விவசாயிகள் நாற்றுவிடத் தொடங்குவர். இதற்கு காம்ப்ளக்ஸ் உரம் மிகவும் அவசியமாகும். இந்நிலையில் இந்த விலை உயர்வால் நாற்று விடலாமா, வேண்டாமா என விவசாயிகள் யோசிக்கத் தொடங்கிவிட்டனர். பொட்டாஷ் உரத்தின் விலை கடந்த 5 மாதங்களில் இரு மடங்கு அதிகரித்தது. ரூ.232லிருந்து ரூ.350 வரை விற்கப்பட்டு வந்த பொட்டாஷ் உர மூட்டைகள், தற்போது ரூ.565-க்கு விற்கப்படுகிறது.

ஏற்கெனவே விளைபொருள்களுக்கு கட்டுப்படியான விலை கிடைக்காமல் வேதனையில் இருந்த விவசாயிகளுக்கு, உரங்களின் இந்த விலையேற்றம் வெந்த புண்ணில் வேலை பாய்ச்சுவதாக உள்ளது.

உரங்களின் இந்த விலையேற்றத்தைக் குறைக்க தமிழக அரசு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.

**நவீன வேளாண் இயந்திரங்கள் இயக்குதல், பராமரித்தல் பயிற்சி**

First Published : 01 Nov 2011 03:56:54 PM IST

வேலூர், அக். 31: நவீன வேளாண் இயந்திரங்கள் இயக்குதல், பராமரித்தல் பயிற்சியை ஆட்சியர் எஸ். நாகராஜன் திங்கள்கிழமை தொடங்கிவைத்தார்.

வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் வேலூர் மாவட்டத்திலுள்ள 50 கிராமப்புற இளைஞர்களுக்கு நவீன வேளாண் இயந்திரங்கள் இயக்குதல் மற்றும் பராமரித்தல் குறித்து பாகாயத்தில் உள்ள அரசு இயந்திர கலப்பை பணிமனை வளாகத்தில் 6 மாதம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சியை தொடக்கிவைத்து ஆட்சியர் பேசுகையில், டிராக்டர், பவர்டில்லர், ரோட்டவேட்டர், விசைத்தெளிப்பான், நெல்நடவு இயந்திரம் உள்ளிட்ட பல்வேறு வேளாண் கருவிகளை இயக்கவும், பராமரிக்கவும், பழுதுநீக்கவும் பயிற்சி அளிக்கப்படும் என்றார்.

விழாவில் வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் எம்.எஸ். இன்பநாதன், வேளாண்மை இணை இயக்குநர் கே. தமிழ்ச்செல்வன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் சேகர், தோட்டக்கலை துணை இயக்குநர் குணசேகரன், விரிஞ்சிபுரம் வேளாண்மை ஆராய்ச்சி மையத் தலைவர் நந்தகுமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**மதுராந்தகம் ஏரியில் நீர் மட்டம் உயர்வு**

First Published : 02 Nov 2011 03:37:55 AM IST



மதுராந்தகம், நவ. 1: தொடர்ந்து பெய்து வரும் பருவமழையால் மதுராந்தகம் ஏரியின் நீர் மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பெரிய ஏரிகளில் ஒன்று மதுராந்தகம் ஏரி. இந்த ஏரி பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஏரிக்கு கிளியாறு, நெல்வாய்மடுவிலிருந்தும் நீர் வரத்து வரும். கடந்த ஆண்டு பெய்த பருவமழையால் ஏரி நிரம்பியது.

இந்த ஆண்டு கடந்த ஒரு வாரமாக பெய்து வரும் வடகிழக்குப் பருவமழையால் கிளியாறிலிருந்து, நெல்வாய் மடுவிலிருந்து நீர்வரத்து அதிகரிப்பால் தொடர்ந்து நீரின் மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது.

ஏரியின் மொத்தக் கொள்ளளவு 21.3 அடியாகும். ஏரி நிரம்பியவுடன் 23.3 அடிக்கு நீர் மட்டம் உயர்ந்ததும் உபரி நீர் வெளியேறும். தற்போது,செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 19.5 அடிக்கு நீர் நிரம்பி உள்ளது.

இது குறித்து பொதுப்பணித் துறையின் செயற்பொறியாளர் ஜி.செல்வராஜ் கூறுகையில், "மதுராந்தகம் ஏரிக்கு வரும் நீர் வரத்தால் தற்போது 19.5 அடியை எட்டியுள்ளது. தொடர்ந்து ஏரியை கண்காணித்து வருகிறோம். ஏரி விரைவில் நிரம்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுதவிர மதுராந்தகம், செய்யூர் தாலூகாவுக்கு உட்பட்ட 257 ஏரிகளின் முழு கொள்ளளவில் 25 சதவீதம் நீர் வந்துள்ளது' என்றார்.

**பருத்தி ஏற்றுமதிக்குத் தடை**

First Published : 02 Nov 2011 12:34:47 AM IST

Last Updated : 02 Nov 2011 06:09:29 AM IST

திருப்பூர், நவ.1: போட்டி நாடுகளில் பருவநிலை மாற்றம் காரணமாக பருத்தி விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இச் சூழ்நிலையில் உள்நாட்டு ஜவுளி உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க பருத்தி ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதிக்க வேண்டும் என்று திருப்பூர் ஏற்றுமதியாளர் மற்றும் உற்பத்தியாளர் சங்கம் (டீமா) வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து சங்கத் தலைவர் எம்.பி.முத்துரத்தினம் விடுத்துள்ள அறிக்கை:

பருவநிலை மாற்றத்தால் பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளில் பருத்தி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இச் சூழ்நிலையில், இந்தியாவிலிருந்து பருத்தி ஏற்றுமதிக்குத் தடை செய்வது உள்நாட்டு ஜவுளி உற்பத்தியாளர்களை ஊக்கப்படுவதுவதாக அமையும்.

போட்டி நாடுகளைக் காட்டிலும் இந்தியாவில் கணிசமான அளவில் பருத்தி விளைச்சல் அதிகமாக இருந்தும் பஞ்சு விலையில் காணப்படும் ஸ்திரமற்ற நிலை காரணமாக நூற்பாலைகள் மூடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. சர்வதேச அளவிலான இந்த வணிகப் போட்டிகளை சமாளிக்க உற்பத்தியாளர்கள் தங்களது இடத்தைப் பாதுகாத்துக் கொள்ள தொடர்ந்து போராட வேண்டியுள்ளது.

இந்நிலையில், போட்டி நாடுகளுக்கு மூலப் பொருள்களை ஏற்றுமதி செய்வது உள்நாட்டு உற்பத்தியாளர்களை முடக்கும் செயலாகும். ஆகவே, விவசாயிகளும், உள்நாட்டு உற்பத்தியாளர்களும் பயனடையும் வகையில் இந்திய பருத்திக் கழகம் (சிசிஐ) மூலமாக மட்டுமே பருத்தி விலையை நிர்ணயிக்க வேண்டும்.

இந்திய உற்பத்தியைக் காட்டிலும் போட்டி நாடுகளில் ஜவுளி உற்பத்திக் கட்டணம் 25 சதம் குறைவாக உள்ளது. இதனால், உள்நாட்டு உற்பத்தியாளர்கள் சர்வதேச போட்டியை சமாளிக்க முடியாமல் திணறுகின்றனர். இச் சூழ்நிலையில், பணவீக்கத்தை காரணம்காட்டி வங்கிக்கடன் வட்டி விகிதத்தை அரசு உயர்த்துவது கவலை அளிக்கிறது. இதுபோன்ற காரணங்களால் உற்பத்தி 10 சதவீதம் குறைந்துள்ளது.

தேவையான பருத்தி உற்பத்தி, நவீன ஆலைகள் உள்ளிட்ட அனைத்து வசதிகள் இருந்தும் நிர்ணயித்த இலக்கை அடைய முடியவில்லை.

ஆகவே, மத்திய, மாநில அரசுகள் ஜவுளித் தொழில் நலன் பாதுகாக்க தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

தினமலர்
உண்மையின் உரைகல்

**தென் மாவட்டங்களில் இரண்டாம் போகத்தில் தீவிர நெல் சாகுபடி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 02,2011,00:00 IST




நெல் சாகுடி கால்வாய் பாசனத்தையும், கண்மாய் மற்றும் கிணற்றுப் பாசனத்தையும் மற்றும் ஐப்பசி அடை மழையையும் பொறுத்து உள்ளது. தற்போது தென் மாவட்டங்களில் அதாவது மதுரை, தேனி, சிவகங்கை, திண்டுக்கல், ராமநாதபுரம் இவைகளில் ஐப்பசி மழை (வடகிழக்குப்

பருவமழை) பெய்யத் துவங்கிவிட்டது. இப்பட்டம் நெல் சாகுபடிக்கு மிகவும் ஏற்றதே. விவசாய விஞ்ஞானிகள் இப்படி திடீரென்று தோன்றும் பருவங்களில் சாகுபடி செய்வதற்கு ஏற்ற நெல் ரகங்களை கண்டுபிடித்துள்ளனர். இப் பட்டத்திற்கு ஏற்ற ரகங்களாகிய ஆடுதுறை 36, ஆடுதுறை 45 மற்றும் ஜே13 போன்றவைகளை சாகுபடிக்கு பயன்படுத்தலாம்.

1. ஆடுதுறை 36 ரகத்தின் வயது 115 நாட்கள். இது பல வருடங்களாக விவசாயிகளால் சாகுபடி செய்யப்பட்டு வருவதால் இதனை காலத்தை வென்ற ரகம் என்று சொல்வார்கள். இது ஆபத்தில் தவிக்கும் விவசாயிகளை காப்பாற்றும் நெல் என்றும் அழைக்கப்படுகின்றது. இதன் அரிசி வெண்மை நிறத்தைக் கொண்டு ஐ.ஆர்.20 அரிசி போலவே இருக்கும். இதன் வயதான நாற்றினை நட்டாலும் மகசூல் பாதிக்கப்படுவதில்லை. இந்த ரகத்தை கொடிய வியாதியோ, பூச்சிகளோ தாக்கி அழித்த வரலாறு கிடையாது. இதில் கணிசமான அளவு வைக்கோல் கிடைப்பதும் குறிப்பிடத்தக்கது. தமிழகத்தின் பல பகுதிகளில் விவசாயிகள் இதனை சாகுபடி செய்து பலன் அடைந்து வருகின்றனர். தென் மாவட்டங்களில் விவசாயிகள் இதனை பயமின்றி சாகுபடி செய்யலாம்.

2. தமிழகத்தில் தற்போது விவசாயிகளின் கவனத்தை கவர்ந்துவரும் அதிசய நெல் ஆடுதுறை 45 ரகமாகும். இது இரண்டாம் போகத்தில் சாகுபடி செய்வதற்கு ஏற்றது. தற்போது விவசாயிகளால் இது ஒரு மகசூல் திறன்மிக்க நெல் என்று போற்றப்பட்டு வருகிறது. இந்த ரகம் உயர் விளைச்சல் ரகத்தைப் போல ஏக்கரில் 4 டன் வரை மகசூல் கொடுக்கத் துவங்கிவிட்டது. வயது 105-115 என்பதால் முதல் போகத்திலும் சாகுபடி செய்வதற்கு ஏற்றது. அணைக்கட்டு பகுதிகளிலும் இதனை சாகுபடி செய்யலாம். இதன் நெல் நடுத்தர சன்னமாக உள்ளது. அரிசி வெண்மை நிறத்தைக் கொண்டு உள்ளது. வெண் புழுங்கல் அரிசி செய்வதற்கு மிகவும் ஏற்றது. ஆடுதுறை 45 ரகத்தினை பூஞ்சாள வியாதி தாக்கக்கூடும். இதனை சுலபமாக கட்டுப்படுத்தலாம். நோயினைத் தடுக்க சூடோமோனாஸ் பிளாரசன்ஸ் ஈர விதை நேர்த்தி செய்யலாம். சாகுபடி சமயம் சாணத்துடன் பவுடரைக் கலந்து வயலுக்கு இடவேண்டும். தொண்டைக் கதிர் சமயம் தண்ணீரில் கலந்து பயிர்மேல் தெளிக்கலாம்.


3. தமிழகத்தில் 100 நாள் நெல்லாகிய ஜே-13 விவசாயிகளால் விரும்பி சாகுபடி செய்யப்படுகின்றது. இந்த குறுகிய கால நெல்லினை இரண்டாம் போகத்தில் சாகுபடி செய்யலாம் என்கிறார் கருப்பாயூரணியைச் சேர்ந்த தர்மராஜன் (மொபைல்: 93624 44440). மதுரை, திண்டுக்கல் மற்றும் காந்திகிராமத்தைச் சுற்றிலும் வறட்சி நிலையில் ஜே-13 விவசாயிகளுக்கு பலனை அளித்துள்ளது. ஜே-13 அரிசி இட்லி போன்ற பலகாரம் செய்ய ஏற்றது. இதில் நல்ல மாவு காணுகின்றது. இதோடு மட்டுமல்ல. இந்த ரகம் பொரி செய்வதற்கும் ஏற்றதாக உள்ளது. சேலம் பகுதியில் கிணற்றுப் பாசனத்தில் குறுகிய கால ரகமாகிய ஜே-13 நெல்லை முதலில் சாகுபடி செய்துவிட்டு உடனே கரும்பு சாகுபடி செய்யப்படுகின்றது. இந்த கரும்பில் வெல்ல மகசூல் அதிகரிக்கின்றது. இந்த ஒரு நன்மைக்காக விவசாயிகள் ஜே-13 ரகத்தை சாகுபடி செய்கின்றனர்.

தென் மாவட்டங்களில் தைரியமாக இரண்டாம் போகத்தில் விவசாயிகள் ஜே-13 ரகத்தை சாகுபடி செய்யலாம். விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடியில் நல்ல அனுபவம் பெற்றுள்ளனர். தற்போது விவ சாயிகள் நெல் சாகுபடி துவங்கி நிலத்தை நடவு செய்வதற்கு ஏற்ற நிலை கொண்டுவந்துள்ளனர். இவர்கள் திருந்திய நெல் சாகுபடி முறைகளை அனுசரித்து கணிசமான லாபம் எடுக்கலாம்.

**-எஸ்.எஸ்.நாகராஜன்**

## சின்னச்சின்ன செய்திகள்

பதிவு செய்த நாள் : நவம்பர் 02,2011,00:00 IST








**சேமிப்பு தானியங்களில் பூச்சி, முட்டைகளை நீக்கும் கருவி**: தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் பூச்சியியல் துறை உருவாக்கி உள்ளது. இக்கருவி 3 முக்கிய பகுதிகளைக் கொண்டது. தானிய உள்வாயில், பூச்சிகளைத் தனியாக சேகரிக்கும் அமைப்புடன் கூடிய "பூச்சிகளை அகற்றும் பகுதி', சுத்தம் செய்யப்பட்ட தானியங்களை சேகரிக்கும் தனி பகுதி (தானிய வெளிவாயில்) என

மூன்று பகுதிகளைக் கொண்டது. இக்கருவியை கையினால் எளிதாக இயக்கலாம். இக்கருவியைக் கொண்டு 5 முதல் 10 நிமிடங்களுக்கு 5-10 கிலோ தானியங்களைப் பூச்சிகளிடமிருந்து சுத்தம் செய்ய முடியும். இதனை தேவைக்கேற்ப மோட்டார் பொருத்தியும் பயன்படுத்தலாம்.**தொடர்புக்கு:** ச.மோகன், பேராசிரியர், பூச்சியியல் துறை, த.வே.பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003.**மொபைல்**: 94884 58006.

இனக்கவர்ச்சிப் பொறி தொழில் நுட்பத்தின் மூலம் நெல் குருத்துப்பூச்சி கட்டுப்பாடு: இந்திய வேதியியல் தொழில்நுட்ப நிலையம் (ஐ.ஐ.சி.டி) மூலம் தயாரிக்கப்பட்ட இனக்கவர்ச்சி மூலப்பொருட்களைக் கொண்டு த.வே.ப.க. இனக்கவர்ச்சி குப்பி கண்டறியப்பட்டுள்ளது. **நன்மைகள்:** குருத்துப்பூச்சியை மட்டும் கவர்ந்து அழிக்க வல்லது. நெல் வயலின் சுற்றுப்புற சூழலுக்கோ உயிர் பெருக்கத்திற்கோ எந்தவித பாதிப்பும் ஏற்படுத்து வதில்லை. எளிய முறையில் கையாளலாம். மேலும் இதன் வேதிக்கூறுகள் நெற்பயிருக்கோ மற்ற உயிர்களுக்கோ எந்தவித பாதிப்பும் ஏற்படுத்துவதில்லை.
**பொருளாதாரம்:** 3 மி.கிராம் குப்பி ஒன்றின் விலை ரூ.10/-. 5 மி.கிராம் குப்பியின் விலை ரூ.15/-. இனக்கவர்ச்சிப் பொறி ஒன்றின் விலை ரூ.25/-. பூச்சிகளின் நடமாட்டத்தை கண்டறிய எக்டர் ஒன்றுக்கு ஆரம்ப முதலீடாக ரூ.200/- தேவைப்படும். (8 இனக் கவர்ச்சிப்பொறி/ எக்டர்) இனக்கவர்ச்சி குப்பியை 21 நாள் இடைவெளியில் 3 முறை மாற்றுவதற்கு மேலும் ரூ.240/- செலவாகும். பூச்சியைக் கவர்ந்து அழிப்பதற்கு எக்டர் ஒன்றுக்கு ஆரம்ப முதலீடாக ரூ.800/- தேவைப்படும் (20 இனக்கவர்ச்சிப்பொறி/ எக்டர்). இனக்கவர்ச்சி குப்பியை 21 நாள் இடைவெளியில் 3 முறை மாற்றுவதற்கு மேலும் ரூ.900 தேவைப்படும்.

**கச்சோளம் கிழங்கு:** சமிலேப்ஸ் நிறுவனத்திற்கு சுமார் 250 ஏக்கரில் பயிரிடப்படும் கச்சோளம் (kaempferi, galanga) தேவைப்படுகிறது. பயிரிட விருப்பமுள்ள விவசாயிகள் மற்றும் வர்த்தகர்கள் **அணுக வேண்டிய முகவரி**: டாக்டர் ஜி.முத்துராமன், பிரின்சிபல் சயின்டிஸ்ட், சமி லேப்ஸ் லிமிடெட், 19/1 மற்றும் 19/2, முதல் மெயின், 2வது பேஸ், பீன்யா இண்டஸ்ட்ரியல் ஏரியா, பெங்களூரு-560 058. (Dr.G.Muthuraman, Principal Scientist, Sami Labs Limited, 19/1 & 19/2, I Main, II Phase, Peenya Industrial Area, Bangaluru560 058)
**மொபைல்**: 0 96323 72130, 0 97509 40564.

கரும்பைத் தாக்கும் வெள்ளைக் கம்பள அசுவினி கடந்த சில ஆண்டுகளாக கரும்புப் பயிரைத் தாக்கி, அதிக சேதத்தை விளைவித்தது ஒரு பூச்சி.?இந்த பூச்சியின் அட்டகாசம் அதிகமானால் அதைக்கட்டுப்படுத்த அறிமுகப்படுத்தப்பட்டதுதான் "டைபா எபிடிவோரா' இரைவிழுங்கி. **மேலும் விபரங்களுக்கு**: முனைவர் கி.மனோகரன், பேராசிரியர் (பூச்சியியல்), விரிவாக்கக் கல்வி இயக்ககம், த.வே.ப.கழகம், கோயம்புத்தூர்-641 003.**மொபைல்:** 98420 40335.-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**சம்பா/பாசனப்பருவ நெல் விதைப்புக்கு முன் விதை நேர்த்தி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 02,2011,00:00 IST

நெல் பயிரினை குலைநோய், பழுப்பு, இலைப்புள்ளி நோய், இலையுறைக் கருகல் நோய், இலையுறை அழுகல் நோய், தண்டு அழுகல் நோய், ஊதுபத்தி நோய், நெல்மணி நிறமாற்ற நோய் என பல்வேறு நோய்கள் தாக்குகின்றன. அவை விதைகள் மூலமாகவும் பரவுகின்றன. பூசண வித்துக்கள் விதையின் மேல் மற்றும் உட்புறம் தங்கியிருக்கின்றன. விதை முளைக்கும்போது பூசண வித்துக்களும் முளைத்து சாதகமான சூழ்நிலையில் நோயினை உண்டாக்கி சேதம் விளைவிக்கின்றன.
**எப்படி:** நெல் விதைகளை ஊறவைப்பதற்கு சற்று முன்னர் ஒரு கிலோ விதைக்கு பத்து கிராம் வீதம் சூடோமோனாஸ் புளூரசன்ஸ் என்ற உயிரியல் காரணி கொண்டு விதைநேர்த்தி செய்ய வேண்டும். விதைநேர்த்தி செய்தவுடன் நீரில் ஊறவைக்க வேண்டும்.
சூடோமோனாஸ் கிடைக்காவிடில் நெல் விதைகளை ஊறவைப்பதற்கு முன்பாக கார்பன் டசிம் அல்லது பைரோகுயிலான் அல்லது டிரைசைக்குளோஜோல் (வணிகப்பெயர் பீம்) போன்ற மருந்துகளில் ஒன்றினை ஒரு கிலோ விதைக்கு இரண்டு கிராம் வீதம் கலந்து ஒரு நாள் வைத்தி ருந்து பின்னர் வழக்கம் போல் நீரில் ஊறவைத்து முளைப்பு கட்டி விதைக்க வேண்டும். விதைநேர்த்தி செய்வதால் நாற்றங்காலில் சாதகமான சூழ்நிலைகளில் தாக்கும் குலைநோயினை தடுக்க இயலும்.
மேலும் உழவர்கள் தங்களது வயல்வெளிப் பிரச்னைகளுக்குத் தக்க ஆலோசனை பெற பாதித்த பயிர் மாதிரியுடன், ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலை யத்திலுள்ள பயிர் மருத்துவ நிலையத்தினை நேரில் அணுகுமாறு ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் எஸ்.ஜெயராஜன் நெல்சன் கேட்டுக் கொள்கிறார்.எஸ்.ஜெயராஜன் நெல்சன்,பேராசிரியர் மற்றும் தலைவர்,பருத்தி ஆராய்ச்சி நிலையம்,ஸ்ரீவில்லிபுத்தூர்-626 125.

**மிளகாய் வற்றல் விலை வேளாண் துறை அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 02,2011,03:04 IST

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்டத்தில் மிளகாய் வற்றல் விலை முன்னறிவிப்பு குறித்து வேளாண்துறை அறிவித்துள்ளது.இது குறித்து வேளாண் துணை இயக்குநர் (வணிகம்) சிவசங்கரன் வெளியிட்ட அறிக்கை:தமிழ்நாட்டில் வற்றல் மிளகாய் உற்பத்தி செய்ய ஐப்பசி மாதத்தில் மிளகாய் நாற்றங்கால் விடப்படும் அல்லது நேரடி விதைப்பு செய்யப்பட்டு மாசி, பங்குனியில் அறுவடை செய்யப்படும். சித்திரை, வைகாசியில் சந்தை வரத்துக்கள் அதிகமாக இருக்கும். அவ்வாறு ஐப்பசியில் விதைக்கப்படும் மிளகாய்க்கு அறுவடையின் போது நல்ல விலை கிடைக்குமா என விவசாயிகள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத்திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மேற்கொண்ட ஆய்வின்படி மிளகாய் வற்றலுக்கு விருது நகர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் 2012ம் பிப்ரவரி, மார்ச் மாதங்களில் ஒரு கிலோவிற்கு ரூ. 60 முதல் ரூ. 70 வரையிலும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.ஆந்திர மாநிலத்தில் மிளகாய் உற்பத்தியின் பரப்பளவு குறைந்துவிட்ட இந்த தருணத்தில் தமிழகத்தில் மிளகாய் பயிர் செய்தால் வற்றலுக்கு நல்ல விலை கிடைக்க வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் ஐப்பசியில் மிளகாய் விதைப்பதால் நல்ல பலனை அடையலாம்.மிளகாயை தாக்கும் வேர் அழுகல் நோயைக்கட்டுப்படுத்த விவசாயிகள் ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் ட்ரைக்கோடெர்மாவை கலந்து நாற்றாங்கலில் விதைக்க வேண்டும் அல்லது ஒரு லிட்டர் தண்ணீரில் 2 கிராம் ரிடோமில் கலந்து நாற்றாங்கால் படுக்கையில் தெளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்

**விவசாய பணிகள் தொடக்கம் தேவையான உரங்கள் இருப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 01,2011,22:27 IST

தேனி : மழையால் மாவட்டம் முழுவதும் விவசாய பணிகள் தொடங்கி உள்ளன. எல்லா தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்களிலும் தேவையான உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.தேனி மாவட்டத்தில் கடந்த 10 நாட்களாக பலத்த மழை பெய்து வருகின்றன. இதனால் விவசாய பணிகள் கிராமங்களில் தொடங்கி உள்ளன. இதனால் உரத்தின் தேவை அதிகாரித்துள்ளது. தேவைக்கு ஏற்ப உரங்கள் தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்கள் மூலம் சப்ளை செய்யப்படுகின்றன.மாவட்டத்தில் தற்போது டி.ஏ.பி., 275 டன், யூரியா 273 டன், பொட்டாஷ் 71

டன், 20க்கு 20 கலப்பு உரம் 234.9 டன் இருப்பு உள்ளது. வெளிமார்க்கெட்டிலும் உரக்கடைகளில் தேவைக்கு ஏற்ப உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப உரங்களை சப்ளை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன என கூட்டுறவுத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்

**நெற்பயிரில் புகையான்: தடுக்க ஆலோசனை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 01,2011,22:27 IST

கம்பம் : கம்பம் பள்ளத்தாக்கில் அறுவடைக்கு தயாராக உள்ள நெற்பயிரில் புகையான் தாக்குதல் காணப்படுகிறது. அதில் இருந்து பாதுகாப்பது குறித்து கம்பம் விவசாயத்துறை உதவி இயக்குனர் (பொ) ராமராஜ் கூறியிருப்பதாவது :கம்பம் பள்ளத்தாக்கில் முதல் போக நெல் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. சில வாரங்களாக மேக மூட்டத்துடன் குளிர்ந்த காற்றுடன்,தொடர்ந்து மழை பெய்து வருகிறது. காற்றில் ஈரப்பதம் அதிகமாக உள்ளது. சீதோஷ்ண நிலை மாற்றத்தால், நெற் பயிரில் புகையான் தாக்குதல் காணப்படுகிறது.நெற்பயிரின் தூரின் அடிப்பாகத்தில் பழுப்பு நிற தத்துப்பூச்சிகள் கூட்டம் கூட்டமாக காணப்படுகிறது. பயிர்கள் திட்டு திட்டாக மாறியுள்ளன. ஒரு சிம்புக்கு ஒரு பூச்சி சிலந்தியுடன் இருந்தால் மருந்தடிக்க தேவையில்லை. வயலில் தண்ணீரை வடித்து விட வேண்டும். எட்டு அடிக்கு ஒரு அடி பட்டமாக பிரித்து விட வேண்டும். இதுதவிர ஏக்கருக்கு 500 மில்லி குளோர்பைரிபாஸ், நூவான் 250 மில்லி, கார்பரில் 250 கிராம், தயோ மெத்தோஸோன் 40 கிராம், தயோ மெத்தோஸான் 40 கிராம் என ஏதாவது ஒரு மருந்தை தெளித்து கட்டுப்படுத்தலாம். பைரித்ராய்டு பிரிவு மருந்துகளை பயன்படுத்தக் கூடாது. மேலும் விபரங்களுக்கு, கம்பம் உதவி இயக்குனர்அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்,என்றார்

**பருவமழை தொடக்கம் விவசாயிகளுக்கு சலுகை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 01,2011,22:27 IST

தேனி : பருவமழை துவங்கி உள்ளாதல் 20 சதவீதம் ஈரப்பதம் உள்ள நெல்லும் கொள்முதல் செய்யப்படும் என அரசு அறிவித்துள்ளது. மாநிலம் முழுவதும் வடகிழக்கு பருவமழை பெய்து வரும் நிலையில், முதல் போக அறுவடை பாதிப்பும், நெல்லில் ஈரப்பதம் அதிகரிப்பும் காணப்படுகிறது. வழக்கமாக 15 சதவீத ஈரப்பதம் உள்ள நெல் மட்டும் (சிவில் சப்ளை கார்ப்பரேஷன் மூலம்)விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்படும். தற்போது, மழை காரணமாக 17 சதவீதம் ஈரப்பதம் உள்ள நெல்லும், டெல்டா மாவட்டங்களில் 20 சதவீதம் ஈரப்பதம் உள்ள

நெல்லும் கொள்முதல் செய்யப்படும் என அரசு அறிவித்துள்ளது.ஏ.டி.டி., 43, ஏ.டி.டி., 39, கல்சர், கோ-45 போன்ற சன்னரகம் உள்ள நெல் 100 கிலோ 1180 ரூபாய் எனவும், ஏ.டி.டி., 36, அம்பாசமுத்திரம் 19, 16, போன்ற பெரிய ரக நெல் 1130 ரூபாய்க்கும் கொள்முதல் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் சிவில் சப்ளை கார்ப்பரேஷன் நெல் கொள்முதல் நிலையங்களை திறந்துள்ளது. எனவே, விவசாயிகள் வெளிநபர்களிடம் குறைந்த விலைக்கு நெல்லை விற்பனை செய்து நஷ்டமடையாமல், இந்நிலையங்களில் விற்பனை செய்ய கேட்டு கொள்ளப்பட்டுள்ளது

**பருவ மழையால் நிரம்பி வரும் கண்மாய் சிவகங்கையில் விவசாய பணி மும்முரம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 01,2011,22:21 IST

சிவகங்கை : வடகிழக்கு பருவ மழை தீவிரமடைந்துள்ள நிலையில், நேற்றைய நிலவரப்படி மாவட்டத்தில் சராசரியாக 12.17 மி.மீ., மழை பதிவாகியுள்ளது.சிவகங்கை மாவட்டத்தில், கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி அதிகபட்சமாக சிவகங்கையில் 27.20 மி.மீ., மழை பெய்துள்ளது. குறைந்தபட்சமாக பாகனேரியில் 1.5 மி.மீ., மழை பெய்துள்ளது. மாவட்டத்தில் சராசரியாக நேற்று 12.17 மி.மீ., மழை பதிவாகியுள்ளது.பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள 417 கண்மாய்களில் சிவகங்கை கீழ்பாத்தி கண்மாய் மட்டுமே நிரம்பியது. சிவகங்கை செக்கடி கண்மாய் 75 சதவீதம் நிரம்பியுள்ளது. மாவட்ட அளவில் 33 கண்மாய்களில் பாதியளவே மழை நீர் தேங்கியுள்ளது. பாதிக்கும் குறைவாக 382 கண்மாய்களில் மழை நீர் தேங்கியுள்ளது.நெல்நடவு துவக்கம்: தொடர் மழையாலும் டிசம்பர் வரை இம்மழை நீடிக்கும் என்ற நம்பிக்கையில், கண்மாய் பாசன வசதி மூலம் முதல் போக நெல் சாகுபடியை விவசாயிகள் துவக்கியுள்ளனர். இதற்காக வயல்களில் நாற்று நடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.தொடர் மழையால், தேவகோட்டை மணிமுத்தாறு கோட்டத்தில் உள்ள 223 கண்மாய்களில், 14 கண்மாய்கள் நிரம்பி வழிகின்றன.51 கண்மாய்கள் நிரம்பும் தருவாயில் உள்ளன. 35 கண்மாய்கள் பாதி நிரம்பியுள்ளன. எஞ்சிய 123 கண்மாய்களில் மழை நீர் சேகரமாகி வருகிறது. சிவகங்கை மாவட்ட அளவில் 640 கண்மாய்களில் 15 கண்மாய்கள் நிரம்பி வழிகின்றன.மழையளவு: நேற்று காலை 8 மணி நிலவரப்படி, காரைக்குடியில் - 7.20 மி.மீ., மானாமதுரை - 9, சிவகங்கை- 27.20, திருப்புவனம் - 18, திருப்புத்தூர் - 6, இளையான்குடி - 10.40, தேவகோட்டை - 7.40, காளையார்கோவில் - 12, பாகனேரி- 1.5 மி.மீ., மழை பதிவானது.

**மழையால் காய்கறி விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 01,2011,23:15 IST

கோவை:தொடர் மழையின் காரணமாக அறுவடை பாதித்துள்ளதால் அனைத்து காய்கறிகளின் விலை சற்று அதிகரித்துள்ளது. தக்காளி மற்றும் ஊட்டி காய்கறிகளின் விலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளன. தலைமை உழவர்சந்தை(ஆர்.எஸ்.புரம்) விலை விபரம்: நாட்டு தக்காளி 18-22 ரூபாய்; ஆப்பிள் தக்காளி 20-25; கத்திரிக்காய் 8-14; வெண்டைக்காய் 20-24; அவரை 30-32; புடலை குட்டை 14-16; நீளம் 18-20; பாகற்காய் 18-20; பீர்க்கங்காய் 18-20; சி.வெங்காயம் 20-25; பெ.வெங்காயம் 16-17; பச்சை மிளகாய் சம்பா 16; குண்டு 18; நூல்கோல் 20-24; பச்ச பட்டாணி 190-200; வாழைக்காய் 18-20; கீரை வகைகள் 16-20; வாழைத்தண்டு மற்றும் பூ 6.50 ; இஞ்சி 18-36; பூண்டு 120-130.ஊட்டி உருளை 20-22; கேரட் 28-30; பீன்ஸ் 30-36; பீட்ரூட் 15-18 (லோக்கல்), 20-22 (ஊட்டி); முட்டைக்கோஸ் பெரியது 14, சிறியது 12; அரசாணி 10-14; பூசணி 10-12; சேனை 18; கருணை கிழங்கு 20; மரவள்ளி கிழங்கு 14; சர்க்கரை கிழங்கு 14; கொத்தவரைக்காய் 18-20; சுரைக்காய் 8-10; பொறியல் தட்டை 16-24; பச்சை மொச்சை 36-40; முள்ளங்கி 16-18; முருங்கைகாய் 30-35; டர்னீப் 20-26; வாழைப்பழம் 16-24; ஆப்பிள் 110-130; மாதுளை 80-150; ஆரஞ்ச் 38; சாத்துக்குடி 26-28; பப்பாளி 13-14; திராட்சை 38-40; எலுமிச்சை 40-45 ரூபாய்க்கு விற்பனையாகிறது. தொடர்மழை காரணமாக கோவை சுற்றுவட்டார பகுதிகளில், அறுவடைக்கு ஆட்கள் வராததால் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால், சேதம் ஏதுமில்லை. இதனால் அனைத்து காய்கறிகளில் விலையும், கடந்த வாரத்தை விட இரண்டு ரூபாய் முதல் நான்கு ரூபாய் வரை விலை அதிகரித்து காணப்பட்டது. மழை குறைந்த பின் விலை குறைய வாய்ப்புள்ளது.

**கோவையில் தொடர் மழை திராட்சை விவசாயம் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 01,2011,23:14 IST

பேரூர்:கோவையில் பெய்து வரும் தொடர் மழையால் திராட்சை விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. திராட்சை விலை வீழ்ச்சியடைந்துள்ளது.கோவை அருகே உள்ள ஆறுமுகக்கவுண்டனூர், தீத்திபாளையம், மாதம்பட்டி, செல்லப்பகவுண்டன்புதூர், கரடிமடை, பூலுவபட்டி, தீனம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில். ஆயிரக்கணக்கான ஏக்கரில் திராட்சை பயிரிடப்படுகிறது.இப்பகுதியில் ஒரு மாதத்துக்கு முன் கவாத்து பணிகள் முடிந்துள்ள நிலையில், தற்போது பெய்து வரும் மழையால் திராட்சை விவசாயம் 90 சதவீதம் முடங்கியுள்ளது;அறுவடை பணிகளும்

பாதித்துள்ளது. இங்கிருந்து கேரளா மாநிலத்துக்கு கொண்டு செல்லப்படும் பழங்களின் தேவையும் குறைந்துள்ளது.
திராட்சை கொடியில் பிஞ்சு மற்றும் பழக்கொத்துகளில் மழைநீர் தொடர்ந்து படிந்திருப்பதால், ஏராளமான பழங்கள் வெடித்தும், பூ மற்றும் பிஞ்சும் அழுகியும் வருகிறது.

கவாத்து பணியிலிருந்து அறுவடை பணிகள் வரை, ஒரு ஏக்கருக்கு, 60 முதல் 70 ஆயிரம் வரை செலவு செய்து, திராட்சை பயிரிட்ட விவசாயிகளுக்கு 75 சதவீதம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது. திராட்சை சாகுபடி தொழில்நுட்ப ஆலோசகர் மாணிக்கம் கூறுகையில்,"முடிந்தவரை அக்டோபர், நவம்பர் மாத கவாத்து பணிகளை விவசாயிகள் மேற்கொள்வதை தவிர்க்க வேண்டும். தற்போது, மழையால் ஏற்படும் நோய் தாக்குதலில் இருந்து பாதுகாக்க, செக்ட் இன், அம்ஸ்டார், அக்ரோபேட், டர்சேட் ஆகிய மருந்துகளை 300 லிட்டர் தண்ணீருடன் தேவையான அளவு கலந்து தெளிக்கலாம்,"என்றார். ஒரு கிலோ திராட்சையின் விலை ரூ. 32 முதல் ரூ. 38 வரை விற்ற நிலையில் தற்போது, கிலோ ரூ. 18 முதல் ரூ. 20 வரை என விற்பனை செய்யப்படுகிறது.

**நிற்காமல் பெய்கிறது பருவமழை; நிரம்புகின்றன அணைகள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 01,2011,23:12 IST

கோவை:கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் பெய்து வரும் கனமழை காரணமாக, இவ்விரு மாவட்டங்களில் உள்ள அணைகள் அனைத்தும் நிரம்பி வருகின்றன. தொடர் மழையால் இன்று பள்ளிகளுக்கு விடுமுறை விட கலெக்டர் உத்தரவிட்டுள்ளார். தென்மேற்குப் பருவமழை திசை மாறி விட்டாலும், வடகிழக்குப் பருவமழைதான் கோவைக்கு சில ஆண்டுகளாக வாழ்வளித்து வருகிறது. இந்த ஆண்டில், வழக்கத்தை விட முன்பாகவே துவங்கி விட்ட வடகிழக்குப் பருவமழை, கடந்த ஒரு மாதமாக பரவலாகப் பெய்து வருகிறது. இதனால், கொங்கு மண்ணும், கோவை மக்களின் மனமும் குளிர்ந்து வருகிறது.மேற்குத் தொடர்ச்சி மலையின் பல்வேறு பகுதிகளிலும் கனமழை தொடர்ந்து பெய்வதால், அணைகளுக்கான நீர் வரத்து அதிகரித்துள்ளது. பி.ஏ.பி.,பாசனத் திட்டத்தின் உயிர்நாடியான பரம்பிக்குளம் அணை இன்னும் ஓரிரு நாட்களில் நிரம்பிவிடும் வாய்ப்புள்ளது; மொத்தம் 72 அடி உயரமுள்ள இந்த அணையில், நேற்றைய நிலவரப்படி 69.47 அடிக்கு தண்ணீர் உள்ளது.

தற்போது இந்த அணையில், 17 ஆயிரத்து 242 மில்லியன் கன அடி தண்ணீர் தேங்கியுள்ளது. வினாடிக்கு 769 கன அடி வீதம் தண்ணீர் வருகிறது. சோலையாறு அணையில் 160 அடிக்கு தண்ணீர் தேக்க முடியும்; இப்போது அதற்கும் அதிகமாக 0.91 அடி உயரத்துக்குத் தண்ணீர்

உள்ளதால், அணை நிரம்பி வழிகிறது. இன்னும் வினாடிக்கு 523 கன அடி வீதம், அணைக்கு தண்ணீர் வரத்து உள்ளது.

பரம்பிக்குளத்தின் இணைப்பு அணைகளான தூணக்கடவு, பெருவாரிப்பள்ளம் ஆகிய அணைகளிலும் 22 அடி கொள்ளளவுக்கு 20.87 அடி அளவுக்கு தண்ணீர் உள்ளது. மொத்தம் 120 அடி உயரமுள்ள ஆழியாறு அணையில், நேற்று காலையில் 119.60 அடிக்கு தண்ணீர் நின்றது. அணைக்கு 950 கன அடி வீதம் தண்ணீர் வரத்து இருந்ததால், இந்த அணை நிரம்பிவிடும் வாய்ப்புள்ளது.

பி.ஏ.பி., திட்டத்தின் பாலாறு படுகை விவசாயிகளுக்கு தண்ணீர் விநியோகிக்க உதவும் திருமூர்த்தி அணையில் 60 அடிக்கு 35.64 அடி மட்டுமே தண்ணீர் நிற்கிறது.

திருப்பூர் மாவட்டத்தின் முக்கிய நீர் ஆதாரமான அமராவதி அணையில், 90 அடிக்கு 56.05 அடி அளவுக்கு தண்ணீர் உள்ளது. அணைக்கு 1,186 கன அடி வீதம் தண்ணீர் வருவதால், அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது.

இதேபோல, பி.ஏ.பி., திட்டத்திலுள்ள பிற அணைகளான மேல் நீராறு, கீழ் நீராறு ஆகிய அணைகளிலும் அதன் முழு கொள்ளளவுக்கு நீர் நிரம்பியுள்ளது. கோவையின் முக்கிய நீர் ஆதாரமான சிறுவாணி அணை, நேற்று நிரம்பியிருக்கும் வாய்ப்புள்ளது. கேரள மாநிலம் முக்காலி, அட்டப்பாடி பகுதிகளில் மழை குறைவு என்பதால், பில்லூர் அணைக்கு நீர் வரத்து அதிகமில்லை.நேற்றைய நிலவரப்படி, 100 அடி கொள்ளளவுள்ள இந்த அணையில், 75 அடிக்கு மட்டுமே தண்ணீர் இருந்தது. பில்லூர் 2வது குடிநீர்த்திட்டத்துக்கான கிணறு வெட்டும் பணி நடப்பதால், குறிப்பிட்ட அளவுக்கு மேல் தண்ணீரைத் தேக்க முடியாத நிலையும் உள்ளது. அணைப்பகுதியில், தினமும் 8லிருந்து 10 மி.மீ.,அளவுக்கு மட்டுமே மழை பெய்கிறது.அணைகளுக்கான நீர்ப்பிடிப்புப் பகுதிகளை விட, நகரப் பகுதியில் அதிக மழை பெய்வதால், பலனை விட பாதிப்பே அதிகமாகவுள்ளது. கோவையிலுள்ள குளங்கள் அனைத்தும் நிரம்பி விட்ட நிலையில், நொய்யல் வாய்க்கால்களில் வெள்ளம் பாய்கிறது; நிலத்தடி நீர் மட்டமும் உயர்ந்து வருகிறது; ஆனால், மழையால் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படுகிறது.

நேற்று காலை வரையிலான 24 மணி நேரத்தில், பெரியநாயக்கன்பாளையத்தில்தான் அதிகபட்சமாக, 26 மி.மீ., மழை பெய்திருந்தது. சூலூரில் 24 மி.மீ., பீளமேடு விமான நிலையத்தில் 22 மி.மீ., மேட்டுப்பாளையம் மற்றும் வால்பாறை பகுதிகளில் தலா 8 மி.மீ., மழை பதிவாகியிருந்தது. ஆனால், நேற்று பகலில் மீண்டும் மழை தட்டி எடுத்தது.இதே நிலை தொடர்ந்தால், இன்னும் ஒரு வாரத்தில் கோவை, நீலகிரி மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள அனைத்து அணைகளும் நிரம்பி விடும் வாய்ப்புள்ளது. இதனால், நீர் மின் உற்பத்தியும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. காற்றாலை மின்சாரம் குறைந்ததை இந்த மின்சாரம் சரிக்கட்டுமென மின் பகிர்மானக் கழக அதிகாரிகள் நம்புகின்றனர்.பள்ளிகளுக்கு விடுமுறை!

கோவை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நேற்று காலையிலிருந்து இரவு வரையிலும் விட்டு விட்டு மழை பெய்துகொண்டேயிருந்தது. வங்கக்கடலில் ஏற்பட்ட காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக, இன்றும் மழை தொடரும் என்பதால், கோவை மாவட்டத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் இன்று விடுமுறை அளிக்குமாறு கலெக்டர் கருணாகரன் உத்தரவிட்டுள்ளார்.

**கோவையில் உலக மலர்கள் சங்கமிக்கும் கண்காட்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 01,2011,23:11 IST

கோவை:தமிழ்நாடு வேளாண் பல்கலை சார்பில் ஐந்தாவது மலர் கண்காட்சி, வரும் ஜனவரியில் மூன்று நாள் நடக்கிறது.பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி கூறியதாவது:தமிழ்நாடு வேளாண் பல்கலை, ரோட்டரி கிளப் ஆப் கோயமுத்தூர் அப்டவுன் இணைந்து" மலர்களை பரிமாறி எண்ணங்களை வெளிப்படுத்துங்கள்' எனும் மையக்கருத்தில் ஐந்தாவது மலர் கண்காட்சி, தமிழ்நாடு வேளாண் பல்கலை வளாகத்தில் நடக்கிறது. கோவை மக்களை குதூகலப்படுத்த ஜன., 5,6, 7 என மூன்று நாள் நடக்கிறது.

இயற்கை வளபாதுகாப்பு, சுற்றுச்சூழல் பராமரிப்பு, அலங்கார மலர்களின் முக்கியத்துவம், வணிக மதிப்பு ஆகியவற்றை பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்களுக்கு எடுத்துச் செல்வது எனும் பிரதான நோக்கத்தோடு நடத்தப்படுகிறது. தோட்டக்கலை வல்லுநர்கள், மலர் வணிக வல்லுநர்கள், மலர் வணிக தொழில்முனைவோர், மலர் அலங்கார நிபுணர்கள் ஆகியோர் தங்கள் எண்ணங்கள், திறமைகளால் மலர்க்கண்காட்சியை அலங்கரிக்க உள்ளனர்.

கண்காட்சியில் கொய்மலர் மற்றும் உதிரி மலர்கள், வெளிநாட்டு மலர் ரகங்கள், ஏரோபிளேன்,மயில், வீணை போன்ற உருவம், போன்சாய் எனும் குட்டைசெடி, உலர் மலர் அலங்கார கைவினை பொருட்கள், மலர்க்கோலம் "இக்கிபானா'என்ற ஜப்பானிய வகை மலர் மற்றும் காய்கறி உருவம் உள்ளிட்டவற்றின் அலங்காரங்கள் இடம்பெறுகின்றன.நூற்றுக்கும் மேற்பட்ட வணிக அரங்குகள் கண்காட்சியில் இடம்பெறுகின்றன.மலர் கண்காட்சியை முன்னிட்டு பல்வேறு போட்டிகள், கலைநிகழ்ச்சிகள் நடக்கின்றன.கண்காட்சியை பார்வையிட பெரியவர்களுக்கு 10 ரூபாய், சிறியவர்களுக்கு 5 ரூபாய் என கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கண்காட்சியின் மூலம் கிடைக்கும் நிதி, ஆதரவற்ற குழந்தைகளின் பள்ளி செலவு மற்றும் போலியாவால் பாதிக்கப்பட்டவர்களின் மருத்துவ சிகிச்சைக்காக அளிக்கப்படுகிறது.அமைச்சர்கள், அதிகாரிகள் பங்கேற்க உள்ளனர்.இவ்வாறு, அவர் கூறினார்.

தமிழ்நாடு வேளாண் பல்கலை பதிவாளர் சுப்பையன், தோட்டக்கலை கல்லூரி முதல்வர் குமார், மலரியல் மற்றும் நிலஎழிலூட்டும் துறை தலைவர் ஜவஹர்லால் ஆகியோர் உடனிருந்தனர்.

**விவசாயிகளுக்கு கடன் வழங்கும் முகாம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 01,2011,22:12 IST

பொள்ளாச்சி:பொள்ளாச்சி பஞ்சாப் நேஷனல் வங்கி சார்பில் விவசாயிகளுக்கான கடன் வழங்கும் முகாம் நடந்து வருகிறது.பொள்ளாச்சி பஞ்சாப் நேஷனல் வங்கி கிளை மேலாளர் சுனில் கூறியதாவது:இந்த வங்கி சார்பில் கடந்த 15 தேதி துவங்கிய கடன் வழங்கும் முகாம் வரும் 30ம் தேதி வரை நடக்கிறது. பொள்ளாச்சி பகுதியில் தேங்காய் சம்பந்தப்பட்ட தொழில்கள் அதிகளவில் நடந்து வருகிறது.வேளாண்மை துறை சார்ந்த தேங்காய் கொள்முதல், கொப்பரை கொள்முதல், பால் கொள்முதல் போன்ற வேளாண் சார்ந்த பணிகளுக்கு பஞ்சாப் நேஷனல் வங்கியில் கடன் வழங்கப்பட்டு வருகிறது.ஒவ்வொரு விவசாயிகளின் தேவையை பொருத்தும் கடன் வழங்கும் தொகை மாறுபடும். கடந்த 15 நாட்களில் 22 வாடிக்கையாளர்களுக்கு 30 லட்சம் ரூபாய் வரை கடன் வழங்கப்பட்டுள்ளது. இதனை முகாமில் விவசாயிகள் பங்கேற்று பயன்பெறலாம் என்றார்.

**உழவு மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 01,2011,22:11 IST

கிணத்துக்கடவு:கிணத்துக்கடவு பகுதிகளில் உழவு மழை பெய்ததால், கடலை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.கிணத்துக்கடவு பகுதிகளில் உள்ள நூறு எக்டர் மானாவாரி நிலங்களில், நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மழையால், கடலை செடிகள் நன்றாக தழைத்து வந்தது. இரண்டு நாட்களுக்கு முன்பு கடலை செடிகளில் இருந்து பூக்கள் பூத்துள்ளது. நேற்றும் மழை பெய்ததால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**அமராவதி அணையில் நீர் திறப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 01,2011,21:35 IST

உடுமலை:அமராவதி அணையிலிருந்து பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. இதனால், இரு மாவட்டத்திற்குட்பட்ட 29 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.அமராவதி அணைக்கு நீர் வரத்து அதிகரித்து நீர்மட்டம் வேகமாக உயர்ந்து

வருகிறது. நேற்றைய நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 90 அடியில் 56.05 அடியாக இருந்தது. ஆயிரத்து 186 கன அடி நீர் வரத்து இருந்தது. கொள்ளளவு 1,410.26 மில்லியன் கன அடியாக உள்ளது. வருவாய்த்துறை சார்பில் அமராவதி ஆற்றங்கரையோர கிராமங்களில் பாதிப்பு ஏற்படும் பகுதிகளில் ஆய்வு நடத்தி முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஊராட்சி நிர்வாகங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளது.பாசனத்திற்கு தண்ணீரை பொதுப்பணித்துறை அமைச்சர் ராமலிங்கம், ஊரக தொழில்துறை அமைச்சர் சண்முகவேலு ஆகியோர் இன்று காலை 11.00 மணிக்கு திறந்து விடுகின்றனர்.

## *மஞ்சளாறு–அமராவதி அணைகளில் இன்று முதல் தண்ணீர் திறப்பு ஜெயலலிதா உத்தரவு*

*சென்னை, நவ.2–*
*மஞ்சளாறு–அமராவதி அணைகளில் இருந்து இன்று (புதன்கிழமை) முதல் தண்ணீர் திறந்துவிட முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இதன் மூலம் 34,646 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.*
*இதுகுறித்து முதல்–அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–*
*விவசாயிகள் கோரிக்கை ஏற்பு*
*தேனி மாவட்டம், மஞ்சளாறு அணையில் இருந்து தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பகுதிகளுக்கு முதல்போக சாகுபடிக்காக தண்ணீர் திறந்துவிடக்கோரி, வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.*
*வேளாண் பெருங்குடி மக்களின் வேண்டுகோளினை ஏற்று, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பகுதிகளுக்கு முதல்போக சாகுபடி பாசனத்துக்காக 2–ந் தேதி (இன்று) முதல் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள சுமார் 5,259 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*
*ஜெயலலிதா உத்தரவு*
*திருப்பூர் மாவட்டம், அமராவதி அணையில் இருந்து திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள பழைய பாசனப் பகுதிகளுக்கு சம்பா நெல் நடவுப்*

பாசனத்துக்காக தண்ணீர் திறந்துவிடக்கோரி, வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.
வேளாண் பெருங்குடி மக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள பழைய பாசனப் பகுதிகளுக்கு சம்பா நெல் நடவுப் பாசனத்துக்காக 2–ந் தேதி (இன்று) முதல் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டத்தில் உள்ள சுமார் 29,387 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.இவ்வாறு முதல்–அமைச்சர் ஜெயலலிதா அறிக்கையில் கூறியுள்ளார்.

## கடந்த 10 மாதங்களில் காபி ஏற்றுமதி 25% வளர்ச்சி



பீ கே கிருஷ்ணகுமார்
இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
நடப்பு ஆண்டின் முதல் 10 மாதங்களில் காபி ஏற்றுமதி 25 சதவீதம் அதிகரித்துள்ளது. இதற்கு ஆகஸ்டு மாதம் வரையில் காபி ஏற்றுமதி சிறப்பான அளவில் அதிகரித்து இருந்ததே காரணமாகும். அதேசமயம் செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் ஏற்றுமதி சரிவடைந்துள்ளது.
செப்டம்பர் மாதத்தில் அமெரிக்க டாலருக்கு எதிரான ரூபாய் மதிப்பு குறைந்து இருந்தது. இது ஏற்று மதியாளர்களுக்கு சாதகமான அம்சமாகும்.
ஆனால், ஏற்றுமதிக்கு வழங்கப்பட்டு வந்த வரிச்சலுகையான டியூட்டி என்டைட்டில்மெண்ட் பாஸ்புக் நிறுத்தப்பட்டுள்ள நிலையில், டாலருக்கு எதிரான ரூபாயின் வெளி மதிப்பு குறைவு காபி ஏற்றுமதியை பொருத்த வரை சாதகமான பலன்களை தராது என தெரிகிறது.
ஜனவரி முதல் அக்டோபர் 28 தேதி வரையில் காபி ஏற்றுமதி கடந்த 2010 ஆம் ஆண்டின் இதே கால கட்டத்திலான ஏற்றுமதியை விட 25 சதவீதம் அதிகரித்து 3.10 லட்சம் டன்னாக அதிகரித்திருந்தது. அதேசமயம் சென்ற ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் இந்த வளர்ச்சி குறைவானதாகும். சர்வதேச சந்தையில் காபிக்கான தேவை குறைந்து வருவதால் ஏற்றுமதியில் தேக்க நிலை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தேயிலை வாரியம் சார்பில்

## தாழ்த்தப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு

## செயல் இயக்குனர் அம்பலவாணன் பேட்டி

குன்னூர், நவ.2–

தேயிலை வாரியம் சார்பில் தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்த விவசாயிகள் முன்னேற ரூ.10 கோடி நிதி ஒதுக்கப் பட்டு உள்ளது என்று தேயிலை வாரிய தென் மண்டல செயல் இயக்குனர் அம்பல வாணன் தெரிவித்து உள் ளார்.

இந்திய தேயிலை வாரியம் மூலம் தேயிலை விவசாயி களுக்கு பல்வேறு மானிய உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறு தேயிலை விவசாயிகள் சங்கம் மற்றும் மகளிர் குழுக்கள் அமைத்து அவர்களுக்கு பச்சை தேயிலை கொள்முதல் மையம் அமைக்க மானிய உதவி வழங்கப்பட்டு வருகிறது.

பச்சை தேயிலையை தொழிற்சாலைகளுக்கு கொண்டு செல்ல வாகனம் வாங்க கடனுதவி, கவாத்து மற்றும் இலை பறிக்கும் எந்திரங்கள் வாங்க மானியம் போன்ற திட்டங்கள் அமலில் இருந்து வருகின்றன.

ரூ.10 கோடி ஒதுக்கீடு

தற்போது தேயிலை வாரியம் சார்பில் தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்த தேயிலை விவசாயிகளுக்கு உதவும் வகையில் திட்டம் வகுத்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இது குறித்து தேயிலை வாரிய தென் மண்டல செயல் இயக்குனர் அம்பலவாணன் கூறிய தாவது:–

இந்திய தேயிலை வாரியம் மூலம் இந்தியாவில் உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்த தேயிலை விவசாயி களின் மேம்பாட்டிற்காக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இந்த தொகை வட இந்தியாவிலும், தென்னிந்தியாவிலும் உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்த 25 ஏக்கருக்குள் தேயிலை தோட்டம் வைத்து உள்ள சிறு விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

சலுகைகள்

இவர்களுக்கு தேயிலை விவசாயிகள் சங்கம், மகளிர் குழுக்கள் ஆகியோருக்கு கிடைக்கும் அனைத்து சலுகைகளும் கிடைக்கும். பச்சை தேயிலை கொண்டு செல்ல வாகனம் வாங்குவதற்கு உதவியாக 50 சதவீத மானியம் வழங்கப்படும்.

இடுபொருட்களுக்கான செலவில் ஒரு ஹெக்டேருக்கு 10 ஆயிரம் ரூபாய் மானிய மாக வழங்கப்படும். பச்சை தேயிலை கொள்முதல் மையம் அமைக்க 5 ஆயிரம் ரூபாயும், தராசு வாங்க 1,500 ரூபாயும், இலை பைகள் வாங்கவும் மானியம் வழங்கப்படும்.

கவாத்து எந்திரம்

கவாத்து எந்திரம் வாங்க 100 சதவீத மானியத்தில் 35 ஆயிரம் ரூபாய் வழங்கப் படும். சுய உதவிக்குழு மற்றும் விவசாயிகள் சங்கத்தில் 50 சதவீதம் தாழ்த்தப்பட்ட உறுப்பினர்கள் இருந்தால் அவர்களுக்கு தொழிற்சாலை அமைக்க 25 லட்ச ரூபாய் மானியமாக கிடைக்கும்.

தாழ்த்தப்பட்ட சிறு தேயிலை விவசாயிகள் தங்கள் நிலம் குறித்த ஆவணங்கள், வருவாய் துறையிடமிருந்து பெறப்பட்ட சாதி சான்றிதழ் போன்றவற்றை கொடுத்து

மேற்கண்ட சலுகைகளை பெறலாம்.
வேலையற்ற தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்த நிலமற்ற இளைஞர்களும் இந்த திட்டத்தின் கீழ் பயன் பெறலாம். கவாத்து எந்திரம், இலை பறிக்கும் எந்திரம் போன்றவை வாங்க நிதியுதவி அளிக்கப்படும். சாதி சான்றிதழ், வங்கி கணக்கு விபரம், பாஸ்போர்ட் புகைப் படம் போன்றவற்றுடன் விண்ணப்பத்தை நிரப்பி தர வேண்டும். மானியத்திற்கான விண்ணப்பங்கள் குன்னூரில் உள்ள தேயிலை வாரிய அலுவலகத்தில் கிடைக்கும்.இவ்வாறு அவர் கூறினார்.

## மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும்

## டாக்டர் ராமதாஸ் அறிக்கை

சென்னை, நவ.2–
மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்று டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளார்.
பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–
பயிர்கள் பாதிப்பு
தமிழ்நாட்டில் பருவமழை காரணமாக நீர்நிலைகளில் உடைப்பு ஏற்பட்டதாலும், பாசன ஏரிகளிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டதாலும் வெளியேறிய நீர் வயல்களில் புகுந்து நெற்பயிரை மூழ்கடித்துள்ளது. தஞ்சாவூர், திருச்சி, நாகப்பட்டினம், திருவாரூர், கடலூர் உள்ளிட்ட காவிரி பாசன மாவட்டங்களிலும், தூத்துக்குடி, நெல்லை உள்ளிட்ட தென்மாவட்டங்களிலும் பல்லாயிரக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இதனால் விவசாயிகள் தங்களின் வாழ்வாதாரத்தை இழந்து செய்வதறியாது திகைத்துள்ளனர்.
உரம் விலை உயர்வு, விதை நெல் தட்டுப்பாடு போன்ற பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு நெல் பயிரிட்ட விவசாயிகள் தற்போது இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்டு கண்ணீரில் வாடுகின்றனர். அவர்களுக்கு ஏக்கருக்கு குறைந்தது ரூ.20,000 இழப்பீட்டுடன், அடுத்து அவர்கள் பயிர் செய்வதற்கு தேவையான உரம் உள்ளிட்ட இடுபொருட்களையும் தமிழக அரசு வழங்கவேண்டும்.
இழப்பீடு வழங்குக
கடந்த சில ஆண்டுகளில் மழை வெள்ளத்தால் பயிர்கள் பாதிக்கப்பட்டபோது, மத்திய அரசு குழு வந்து பாதிப்பை மதிப்பீடு செய்தது. ஆனால், மத்திய அரசு ஒரு ரூபாய்கூட இழப்பீடு வழங்கவில்லை. இதனால் உழவர்களுக்கு போதிய இழப்பீடு கிடைக்கவில்லை. இந்த முறை மத்திய அரசிடம் கடுமையாக வலியுறுத்தி மழை வெள்ள பாதிப்பிற்கான இழப்பீட்டை பெறுவதுடன், தமிழக அரசும் அதன் பங்கை சேர்த்து உழவர்களுக்கு போதிய இழப்பீடு வழங்கவேண்டும்.
இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாணும் வகையில் தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு திட்டத்தை எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கான பிரீமியத்தையும் மாநில அரசே செலுத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.